DINAMALAR 04-05-12

# மெட்ரோ ரயில் பாதைக்காக வலிமையான சிறப்பு தண்டவாளங்கள்

## ஜல்லி கற்களுக்கு பதிலாக 'பேசனிங் சிஸ்டம்'

- எஸ்.விவேக் -

மெட்ரோ ரயில் ஓடும் பாதையில், அதிக உறுதியுள்ள சிறப்பு தண்டவாளங்கள் பொருத்தப்படுகின்றன. மெட்ரோ பாலத்தின் மீது ஏற்றப்பட்ட தண்டவாளங்கள், 'பேசனிங் சிஸ்டம்' முறையில் பணியை எளிதாக செய்யும் வகையில் நகர்த்தப்பட்டு வருகின்றன.

**தண்டவாளங்கள் தயார்**

சென்னை கோயம்பேடு - கிண்டி இடையே மெட்ரோ ரயில் ஓடும் பாதைக்காக, தண்டவாளங்களை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதற்காக, தயாரிக்கப்பட்டுள்ள தண்டவாளங்கள் அதிக உறுதி தன்மை கொண்டதென, மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகள் கூறினர்.

வழக்கமாக ரயில் செல்லும் பாதையில், 880 கிரேடு உறுதி தன்மையுள்ள தண்டவாளங்களே அமைக்கப்படும். ஆனால், மெட்ரோ ரயில் ஓடு பாதையில், 1080 கிரேடு வலிமையுள்ள தண்டவாளங்கள் பொருத்தப்படுகின்றன. இவை, 18 மீட்டர் நீளத்தில் ஒரு டன் எடை கொண்டதாக உள்ளது.



கோயம்பேடு - வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் பாதையில், பதிப்பதற்கு வசதியாக, தண்டவாளத்தை நகர்த்தும் பணி நடக்கிறது.

**'பேசனிங் சிஸ்டம்'**

தண்டவாளம் அமைப்பதற்கு கான்கிரீட் தளம் போடப்பட்டு, தண்டவாளத்திற்கும், கான்கிரீட் தளத்திற்கும் துணையாக ஜல்லி கற்கள் போடுவர். மெட்ரோ ரயில் ஓடும் பாதைக்காக, 'பேசனிங் சிஸ்டம்' என்ற முறை பின்பற்றபடவுள்ளது. இந்த முறைப்படி, கான்கிரீட் தளம் போடப்பட்டு, அதன்மீது தண்டவாளங்களின் அதிர்வுகளை தாங்கி கொள்ளும் வகையில், மெகா ரப்பர்கள் பொருத்தப்படுகின்றன.

இந்த நிலையில், கான்கிரீட் தளத்துடனே தண்டவாளங்களை பக்கவாட்டின் இருபுறமும் தாங்கி பிடிக்கும் இரும்பு கம்பிகள் நிலையாக பொருத்தப்பட்டிருக்கும். இந்த கம்பிகளை இணைப்பது மூலம் தண்டவாளங்கள் நகராமல் நிலையாக இருக்கும்.

**ரயில் 'சேன்ஜர்'**

தற்போது கோயம்பேடு - கிண்டி வழித்தடத்தில், தண்டவாளங்களை பொருத்த ரயில் 'சேன்ஜர்' என்ற உபகரணத்தின் மூலம் நகர்த்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இரண்டு ரயில் சேன்ஜர்கள் மூலம், 'செயின் பிளாக்' உதவியுடன் தண்டவாளங்கள் தூக்கப்பட்டு, பின் அவற்றை 'ரோலர்'கள் மூலம் உரிய இடத்திற்கு பணியாட்கள் நகர்த்தி செல்கின்றனர்.

இப்படி அனைத்து தண்டவாளங்களையும் நகர்த்தி, 18 மீட்டர் நீளமுள்ள தண்டவாளங்களை, 200 மீட்டர் அளவில் ஒன்றாக இணைக்கும் வகையில் வெல்டிங் செய்யும் பணியும் விரைவில் நடைபெறவுள்ளது.

அந்த பணி முடியும் நிலையில், அடுத்த வாரத்தில் தண்டவாளங்கள் பதிக்கும் பணி விறுவிறுப்பை எட்டிவிடும் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.